**மொரட்டுவ பல்கலைக்கழகம் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமை-ந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107 (5) ஆவது உபபிரிவு பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிரு-க்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை

பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

## 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்கு விதி 757 – (2) (அ) | மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் இருப்புகளின் மீளாய்வு அறிக்கைபடி பேணுதல் களஞ்சியத்தில் ரூபா.3,304,883 ஆன இருப்புகளின் பற்றாக்குறை தொடர்பில் 2020 யூலை 07 ஆந் திகதி வரை நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | இது தொடர்பாக விபரமாக கண்டறிவதற்கும், அதன்படி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக செயலாற்றுதல் வேண்டும். |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க அரச கணக்கீட்டு சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்திற்கு உரியதாக உள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பில் நிலையான சொத்துக்களின் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருந்தது. | தற்போது 2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை சுவீகரித்துக்கொண்ட எல்லா சொத்துக்களினதும் மீள்கணிப்பீடு பெறுமதிகள் மற்றும் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்திருந்த சொத்துக்களின் பெறுமதிகளை உள்ளடக்கப்பட்டுள்ளது.<br>2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த சில நிலையான சொத்துக்கள் தொடர்பாகவும், தற்போது பூர்த்தி செய்துள்ள மட்டத்தில் நிலையான சொத்துக்களின் பதிவேடு வழங்கலாம். | நிலையான சொத்துக்களின் பதிவேடு உரியவாறு தயாரித்து இற்றைப்படுத்தி பேணுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீள்யாவிற்கான ஆண்டில் தொழில்பட்டு விளைபயன் ரூபா.458,904,896 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 98,671,571 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயன் ரூபா.360,233,325 ஆன வீழ்ச்சியடைதல் அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் மீண்டுவருஞ் செலவினங்களின் பொருட்டு அரசாங்க அளிப்புகளில் கிடைக்கப்பெறுதல் ரூபா.427,570,000 ஆல் அதிகரித்திருப்பினும், ஆளுக்குரிய வேதனாதிகள் ரூபா. 417,211,176 ம், பணிக்கொடை செலவினம் ரூபா. 329,996,358 ம், உடன்படிக்கை சேவைகளின் செலவினம் ரூபா. 43,303,426 ம் என்ற வகையில் அதிகரித்தல் பிரதான காரணங்களாகியிருந்தன.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 பொருளாதாரமற்ற கொடுக்கல்வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| சரியான திட்டம் இல்லாமை காரணமாக மேற்கொண்ட பூங்கா அலங்காரம், உரியவாறு நிறைவேற்றாமை காரணமாக தனிப்பட்ட ஒப்பந்த கம்பெனிகளிடம் செலவிடப்பட்ட ரூபா.3,093,310 ஆன தொகை பொருளாதாரமற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது. | இந்த கருத்திட்டம் மேற்கொள்கையில் பல்கலைக்கழகத்தின் தேவைமீது பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்றத்தாழ்வு கட்டளைகளை வழங்கப்பட்டு வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன், விடயவெல்லையில் உள்ளடக்கியுள்ள விடயங்களிலும், மாற்றங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. எவ்வாறாயினும், கருத்திட்டத்தில் ஒப்பந்தக்காரர்களால் நிறைவேற்றப்பட்ட பணிகளை பௌதீக ரீதியாக பரிசோதனை செய்து சான்றிதழ் மற்றும் பரிந்துரைகளை பெற்றுக்கொண்டு ரூபா.3,094,759 ஆன கொடுப்பனவு மேற்கொண்டுள்ளதுடன், அதன் செலவினம் பல்கலைக்கழகத்தின் தேவைக்காக மேற்கொண்டுள்ளமையால் பொருளாதாரமற்ற கொடுப்பனவாக கருத இயலாது. | உரியவாறு தயாரிக்கப்பட்ட திட்டங்களின்மீது ஒப்பந்தங்களை அளித்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கற்கை லீவு பெற்று வெளிநாடு சென்ற 37 பல்கலைக்கழக ஆசிரியர்களில் உடன்படிக்கைகள் மற்றும் முறிகள் மீறியமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்தம் ரூபா.76,861,700 அறவிட வேண்டியிருந்ததுடன், அதில் 20 ஆண்டுகள் கடந்து 09 பல்கலைக்கழக ஆசிரியர்களிடம் அறவிடப்பட வேண்டிய தொகையின் மொத்தம். 5,826,861 ஆகும். | 2019 ஆம் ஆண்டில் ரூபா.17,100,722 தொகையிலான முறிகளை மீறய அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட்ட பின்னர் 2019.12.31 ஆந் திகதியில் ரூபா.76,861,700 அறவிட வேண்டியுள்ளது. உடன்படிக்கைகள் மற்றும் முறிகள் என்பன மீறிய 20 ஆண்டுகள் சென்றுள்ள 10 அலுவலர்கள் தொடர்பில் முறிகளை மீளாய்வு செய்யும் குழுவின் ஆலோசனைகள், வழிகாட்டல் மீது அறவிடல்களை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | உடன்படிக்கைகளை மீறிய பல்--கலைக்கழக ஆசிரியர்களிடமிருந்து முறிகளின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், செலுத்தாத பல்கலைக்கழக ஆசிரியர்கள் தொடர்பில் சட்டத்துடனான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) யுனி கன்சல்டன்சி கம்பெனியிடம் சட்டத்துடனான சட்டகத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக பொது தொழில்முயற்சிகள் சபையால் பல்கலைக்கழகத்திடம் அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளும்படி கட்டளை விடுக்கப்பட்டிருப்பினும், அறிக்கை திகதி வரை அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிவல்லை. | யுனி கன்சல்டன்சி கம்பெனிக்கு சட்டத்துடனான சட்டகத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக பொது தொழில்முயற்சிகள் சபையால் பல்கலைக்கழகத்திடம் அனுமதி பெற்றுக்கொள்ளும்படி கட்டளையிடப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன்படி 2020 செப்தெம்பர் மாதமாகும்போது அனுமதிக்காக அமைச்சரவை பத்திரம் அமைச்சிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆண்டு தொடக்கம் 2018 ஆண்டு வரையிலான காலப் பகுதிக்குள் தேவையை இணம் காணப்படாமல் கொள்வனவு செய்திருந்த மொத்தம் ரூபா. 5,422,227 ஆன டோனர் மற்றும் காட்டிரேஜ் 397 பிரதான களஞ்சியத்தில் இருந்தது. | இந்த டோனர் மற்றும் காட்டிரேஜ் எதிர் காலத்தில் தேவையான திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளிடம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தேவை அடையாளம் காணப்பட்டு களஞ்சியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ)பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைதூர கல்வி நிலையம்மூலம் கூட்டிணைப்பு செய்கின்ற “BIT” கற்கை நெறிக்-காக தனியார் நிறுவனங்களுடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கைகளின்படி ஒவ்வொரு நிறுவனங்களால் ஆண்டு ஒன்றுக்கு 60 பேர் கொண்டமைந்த ஆகக் குறைந்த மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டுமாயினும், உரிய காலப்பகுதிக்குள் 14 தொடக்கம் 40 வரையிலான எண்ணிக்கையினரை ஆட்சேர்ப்புச் செய்யாமை காரணமாக அந்த தனியார் நிறுவனங்களிடம் அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா.8,255,000ஐ அறவிடுவதற்கு கணக்காய்வு திகதியான 2020 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இது தொடர்பாக முகாமைத்துவ சபையின் அனுமதிக்கமைவாக சரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.4 கருத்து வேறுபாடுகளுக்கான கொடுக்கல்வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் "BIT" கற்கைநெறிகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானத்தில் ரூபா.13,016,437 ஐ நிருவாக கட்டணமாக சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் | 2018 ஆண்டு இறுதி வரை இந்த CODL நிலையத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதி ஆட்சேர்ப்புச் செய்யாதபடியால் தேவையான ஊழியர்களை வெளியகத்தில் பெற்றுக்கொண்டிருக்கலாம் என்பதுடன், அதற்கு தேவையான ஊழியர்களை Uni Consultancy என்ற நிறுவனத்திடமிருந்து | உடன்படிக்கை பிரகாரம் பணியாற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தரப்பினர் அல்லாத UNI Consultancy கம்பெனியிடம் செலுத்தப்பட்டிருந்தது. | பெற்றுக்கொண்டிருந்ததுடன், அந்த ஊழியர்களின் சம்பளம் பொருட்டு ரூபா.13,016,437 ஐ மேற்படி காலப்பகுதிக்கு செலுத்தப்பட்டது. அதனை நேரடியான செலவாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த நிலையத்திற்கு தேவையான ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. எதிர்வருங் காலத்தில் இவ்வாறு Uni Consultancy நிறுவனத்திடம் செலுத்த வேண்டி ஏற்படமாட்டாது. | |

**3.5 நிதியங்களின் குறை பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 திகதியில் பல்கலைக்கழக கற்கைநெறிகள் மற்றும் 35 திணைக்களங்களில் அபிவிருத்தி நிதியங்களில் மொத்தம் ரூபா.13,137,228 தொகை ஆண்டினுள் பயனற்று இருந்ததுடன், 27 நிதியங்களில் மொத்தம் ரூபா.50,475,124 ஆன குறை பயன்பாடு காணப்பட்டது. | இந்த நிதியங்கள் ஒரு ஆண்டு அல்லது பல ஆண்டுகள் செயலற்று இருப்பினும், அவை எதிர் காலத்தில் சம்பந்தப்பட்ட பணிகளின் பொருட்டு பயன்படுத்தப்படும். வெளியக நிறுவனமொன்றால் வழங்கும் நிதியம் அல்லாத படியால் அவற்றின் சிலவற்றை செலவிடாது ஒதுக்கமாக வைத்துக்கொள்வதில் பிரச்சினை இல்லை. | நிதியங்களை உரிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் பொருட்டு பயன்படுத்தல் வேண்டும். |
| (ஆ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்தம் ரூபா.4,548,539 ஆன 26 புலமைப் பரிசில் நிதியங்கள் 26 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் குறை பயன்பாட்டுடன் இருந்ததுடன், புலமைப் பரிசில் வழங்கும் தேர்வு முறைகளில் உள்ள பிரச்சினைகள் இதற்கு காரணமாக அமைந்திருந்தது. | இந்த புலமைப் பரிசில் நிதியம் தொடர்பாக சம்பந்தப்பட்ட குழுவின் அறிக்கை விரைவாக பெற்றுக்கொள்வதற்கும், அதன்படி எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பணியாற்றப்படும். | தேர்வு முறைகளில் உள்ள பிரச்சினைகளை தீர்த்துக்கொண்டதன் பின்னர் உரிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு நிதியங்களை பயன்படுத்தல் வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாற்தொகுதி ஒழுங்குமுறையில் 987 ம் மற்றும் 873 ம் ஆகியதுடன், உண்மையான கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாற்தொகுதி ஒழுங்கு முறையாக 588 ம் 676 ம் ஆகியதால் வெற்றிடங்கள் முறையாக 399 ம் மற்றும் 197 ஆகும். வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையின்மீது 80 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், கல்விசார் பணியாற்தொகுதியின் வெற்றிடங்கள் பொருட்டு வெளியக விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்து மீளாய்விற்கான ஆண்டுக்காக ரூபா.37,600,964 ஆன கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | கல்விசார் மற்றும் கல்விசார் உதவியாளர் பதவிகளில் வெற்றிடங்களை உரிய பிரிவுகளின் பிரிவுத் தலைவர்களது கோரிக்கைபடி நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன், கல்விசாரா பணியாற்தொகுதியின் வெற்றிடங்கள் உயர் கல்வி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெறும் பட்டியல்கள் மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |